

# படு த்ரில் சுற்றுலா!











தோளில் துண்டு போட்டுக் கொள்வது போல மலைப்பாம்பை போட்டுக் கொண்டு தைரியமாக வருகிறார்கள் சுட்டிகள். இவர்கள் பாம்பு பிடித்து பழக்கப்பட்ட சுட்டிகள் அல்ல... பள்ளிகளில் பேனா பிடிக்கும் சுட்டிகள்தான். எங்கே நடந்தது இந்த ஆச்சர்யம் என்கிறீர்களா? சென்ற மாதம் ஈஷா யோகா மையம் ஏற்பாடு செய்திருந்த சுட்டிகள் சம்மர் கேம்ப்பில்தான் இவையெல்லாம்.

"மனித இனத்துக்கு மிகப்பெரிய வரம் இயற்கை. ஆனால் இரக்கமின்றி இயற்கை அழிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக்கூடத்தில் இயற்கையைப் பாதுக்காக்கணும்னு சொல்லித் தருவாங்க. வெறும் எழுத்துல மட்டும் இயற்கையைப் பத்தி படிக்கிற சுட்டிகளால உணர்வுபூர்வமா இயற்கையை அனுபவிக்க முடியாது. அதனால காட்டுக்குள்ளேயே சுட்டிகளை அழைத்துச் சென்று இயற்கை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தணும்னு முடிவு செஞ்சோம். அதுக்காக ஒவ்வொரு வருஷமும் 'இயற்கை விழிப்புணர்வு நிகழ்ச்சி' நடத்திக்கிட்டு வர்றோம். இந்த வருஷத்துக்கான நிகழ்ச்சியில பங்கேற்க நாடு முழுவதிலும் இருந்து 9-13 வயசுக்குட்பட்ட சுட்டிகள் 53 பேரை தேர்வு செஞ்சோம். காட்டுக்குள் சென்று வந்த த்ரில் அனுபவத்தை அவங்ககிட்டேயே கேளுங்களேன்" என்றார்கள்.

சுட்டிகளிடம் பேசினோம். "நாங்க காட்டுக்குள்ள போறப்போ வழியில அட்டைப் பூச்சி தொல்லை. ரொம்ப பேருக்கு காலில் அட்டைப் பூச்சி ரத்தம் குடிச்சிக்கிட்டு இருந்துச்சு. ஆனா, வலியே இல்லை. எங்களைக் காட்டுக்குள்ள கூட்டிட்டுப் போன சுவாமி, ஒரு மலைப் பாம்பைப் பார்த்ததும் பிடிச்சு வந்து ஒரு லெக்சர் எடுத்தாங்க. அந்தப் பாம்பை தோள் மேல போட்டு போட்டோ எடுத்துக்கிட்டோம். இப்போ மலைப் பாம்புன்னா எங்களுக்கு பயமே இல்லை. முரட்டு உடம்பு, பெரிய கொம்போடு காட்டெருமை பார்த்தோம். அப்புறம், தூரத்துல குட்டியோட நின்னுக்கிட்டு இருந்த யானையைப் பார்த்தோம். ஐய்யோ... அந்த யானைங்க எல்லாம் எவ்ளோ அழகு தெரியுமா!" என்று த்ரில் கொஞ்சமும் குறையாமல் பரவசமாக பேசுகிறார்கள்.

"காட்டுக்குள்ள வாக்கிங், யோகான்னு உடம்பையும் பார்த்துக்கிட்டோம். டென்ட் அடிச்சு நைட் தங்கினோம். முதலில் பயம் இருந்தாலும் அப்புறம் அந்த த்ரில் அனுபவம் ரொம்பவே பிடிச்சிருச்சு. வழியில் இருந்த அருவியில் குளிச்சோம். 'ஹாட் ஏர் பலூன்'ல போனோம். பாம்புகள் பத்தி 'லைவ்'வா செமினார் கூட எடுத்தாங்க. நம்மக்கிட்ட எதையும் எதிர்பார்க்காம, நமக்காக எவ்ளோ நன்மை செய்யுற இயற்கையை அழிக்கக்கூடாது. அதனால இயற்கையை பாதுகாப்போம்னு எல்லார்கிட்டேயும் வலியுறுத்துவோம்" என்று உறுதியாகச் சொன்னார்கள் சுட்டிகள்.

படங்கள்: தி.விஜய்







அ.சுப்புராஜ்